தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-3-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் முதுநிலை ஆராய்ச்சி

வேகமாக வளர்ந்து வரும் நகர்ப்புற சூழ்நிலையில் அலங்காரத் தோட்டக்கலையின் முக்கியத்துவத்தை அறிந்து அதில் ஆராய்ச்சி பணிகளை மேற்கொள்ளும் வண்ணம் கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகமானது கோவை கோல்ப் விளையாட்டு குழுமம் மற்றும் பெங்களூரு இந்திய பசுமை உள்கட்டமைப்பு கூட்டமைப்புடன் இணைந்து மலரியல் மற்றும் நில எழிலூட்டும் துறையில் முதுநிலை ஆராய்ச்சிகளை மூன்று ஆண்டுகள் மேற்கொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தமானது தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். கு. இராமசாமி அவர்கள், முனைவர். கே. இராஜாமணி, முதல்வர், முனைவர். எம். கண்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர், மலரியல் மற்றும் நிலஎழிலூட்டும் துறை மற்றும் உதவி பேராசிரியர் முனைவர். சி. சுபேஷ் இரஞ்சித் குமார் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர். இரா. இரபீந்திரன் அவர்கள் 2015 மார்ச் 10-ம் தேதி அன்று கையெழுத்திட்டார்.

தனியார் நிறுவனங்கள் சார்பில் திரு. ஆர். கோபிநாத், துணைத்தலைவர், கோவை கோல்ப் விளையாட்டு குழுமம் மற்றும் திரு. ஹேமகுமார், தலைவர், இந்திய பசுமை உள்கட்டமைப்பு கூட்டமைப்பு ஆகியோரும் கையெழுத்திட்டனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்